132—

## கொப்பரை கொள்முதல் நிலையம்

***4080—திரு. என். சுரேஷ் ராஜன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராஜாக்கமங்கலத்தில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் தேரூர் மற்றும் திங்கள் சந்தையிலும், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக வரித் துறை சார்பாக வடசேரியிலும் 3 கொப்பரை கொள்முதல் மையங்கள் துவக்கப்படவுள்ளன. இந்நிலையில் இராஜாக்கமங்கலத்தில் கொப்பரை கொள்முதல் மையம் துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

**திரு. என். சுரேஷ் ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜாக்கமங்கலம் பகுதியின் சுற்றுவட்டாரப் பகுதி முழுவதிலும் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தென்னை விவசாயம் 50,000 ஏக்கர் நிலப்பரப்பிலும், ரப்பர் விவசாயம் 50,000 ஏக்கர் நிலப்பரப்பிலும், நெல் பயிர் 20,000 ஏக்கர் நிலப் பரப்பிலும், வாழைப் பயிர் 20,000 ஏக்கர் நிலப்பரப்பிலும் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்கு விளைபொருட்களுக்கான தகுந்த விலை கிடைக்கவில்லை, அந்தப் பகுதிகளில் விளைபொருட்களை சேமித்துவைப்பதற்கு சேமிப்புக்*

*கிடங்கு இல்லாததால் மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதிகளில் ஒரு சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா என்று மூலக்கேள்வியில் கேட்டிருந்தார்கள். இப்போது சேமிப்புக் கிடங்கு கேட்கிறார்கள். இரண்டும் மாறுபட்ட கேள்விகளாக இருக்கின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை தலைமையேற்று நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தற்போதுகூட 149 கிடங்குகள் கட்டப்படுமென்று நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின்போது ஏற்கெனவே விதி 110—ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தப் பகுதியில் இடம் இருக்கும்பட்சத்தில், துறையின் சார்பாக நிச்சயமாக சேமிப்புக் கிடங்குகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், அந்தப் பகுதியில் பொதுவாக 5,148* hectare *பரப்பளவில் தேங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. அதில், 7,72,000 தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. ஒரு மரத்திற்கு 90 காய்கள் உற்பத்தியாகின்றன என்ற விவரங்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே பகுதியில் தேரூரிலும், திங்கள்சந்தையிலும், 2016 கொப்பரை கொள்முதல் மையங்கள் துவக்கப்பட்டன. ஆனால் விவசாயிகளிடமிருந்து கொப்பரை ஏதும் வரவில்லை. அந்த விவசாயிகள் யாரும் கொப்பரைத் தேங்காய் விற்பனை செய்வதற்கு முன்வரவில்லை. கோரிக்கை வைக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் மையங்கள் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரையில், விவசாயிகள் நலம் பெற வேண்டும் என்பதற்காகதான், இன்றைக்கு கூட்டுறவுத்*

துறையின் மூலமாக 34 இடங்களிலும், வேளாண்மைத் துறையின் சார்பாக 28 இடங்களிலும் தமிழகத்தில் கொப்பரை கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மையங்களைப் பற்றிய விவரங்களை தென்னை விவசாயிகளிடம் எடுத்துச் சொல்லி, அவர்கள் இந்த மையங்களைப் பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால், கொப்பரைத் தேங்காய் மிகவும் குறைவான விலையில் விற்கப்படுகிறது. மார்க்கெட் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு கொடுக்கும் விலை அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஒரு விவசாயியாக இருப்பதனால், அவர் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், அதிகமான கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலே கூட்டுறவுத் துறையின் சார்பாக 34–ம், வேளாண் துறையின் சார்பாக 28–ம் ஆக மொத்தம் 20 மாவட்டங்களில் 62 கொள்முதல் மையங்கள் இயங்கி வருகின்றன.

வெளி மார்க்கெட்டில் கொப்பரைத் தேங்காய் விலையைப் பார்த்தீர்கள் என்றால், 77 ரூபாய் முதல் 80 ரூபாய் வரைதான் விற்கப்படுகிறது. ஆனால், இந்த மையங்களில் ஒரு கிலோ கொப்பரைத் தேங்காய் 95 ரூபாய் 21 பைசாவிற்கு கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, தென்னை விவசாயிகள் இந்தக் கொள்முதல் நிலையங்களைச் சரியாகப் பயன்படுத்தி, பயனடைவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை தென்னை விவசாயிகளிடம் எடுத்துச் சொல்லி, இந்த மையங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்த கொள்முதல் மையங்களில் தவறு ஏதும் நடக்காமல் உண்மையான விவசாயிகள் பயனடையும்வகையில் பல்வேறு விதிகளை வகுத்து, இன்றைக்கு உண்மையான தென்னை விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட இருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

2019 ஜூலை 18]

இந்த அருமையான வாய்ப்பை தென்னை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சரியாக ஆறு மாதங்கள் வரை இந்தக் கொள்முதல் மையங்கள் இயங்கும்.

ஏற்கெனவே வேளாண் துறையின் சார்பாக கடந்த 12 ஆம் தேதியே இந்த மையங்கள் தொடங்கப்பட்டுவிட்டன. கூட்டுறவுத் துறையின் சார்பாக வருகின்ற 22 ஆம் தேதி மொத்தம் 34 மையங்கள் இயங்க இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆறு மாதங்களில் தென்னை விவசாயிகள், அவர்கள் விளைவித்த கொப்பரைகளை அங்கே விற்பனை செய்யலாம் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டதன் அடிப்படையிலே இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தென்னை விவசாயிகள், அதுபோன்று ரப்பர் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் கடனைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அவ்வாறு கடன் கேட்கும்போது கூட்டுறவு வங்கி கடன் வழங்குகிறது. அதில் எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. ஆனால், கடன் வழங்குகின்றபோது 20 சதவிகிதம் fertilizer அதாவது உரங்களை வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளைப் பொறுத்தமட்டில், இயற்கை விவசாயத்தைப் பயன்படுத்த பழக்கப்பட்டு வருகிறார்கள். எனவே, உரங்களை வாங்க வேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்தாமல், வழங்கக்கூடிய வங்கி loan-ஐ முழுமையாக வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். பொதுவாக விவசாயிகள் பயிர் செய்வதற்காக அரசாங்கம் வட்டியில்லாக் கடன் கொடுக்கிறது.

வட்டியில்லாக் கடன் என்றால், விவசாயிகள் தனியாரிடம் கடன் வாங்கி சிரமப்படக் கூடாது என்ற அடிப்படையில் 7 சதவிகித வட்டியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே ஏற்றுக்கொள்கிறது. எனவே, அப்படிப்பட்ட விவசாயிகள், அவர்கள் செய்யக்கூடிய விவசாயத்திற்குத் தேவையான இயற்கை உரம் இன்றைக்கு நம்முடைய கூட்டுறவுத் துறையின் சார்பாக, TANFED மூலமாக எல்லா கிடங்குகளிலும் கிடைக்கிறது. எனவே, உரங்கள் வாங்கி, அவர்கள் உரிய விதைகளை வாங்கிப் பயிரிட்டால்தான் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நல்ல நோக்கத்தில் செய்யப்படுகிறது. இதில் தவறுகள் நடக்கக் கூடாது. உண்மையான விவசாயிகள் பயனடைய வேண்டும் என்பதுதான் அம்மா அவர்களின் அரசின் நோக்கம். இதில் எந்தவிதமான தவறும் இல்லை. உரங்கள் வாங்க வேண்டும் என்று சொல்வது, உண்மையான விவசாயிகள் அங்கே உரத்தை வாங்க வேண்டும். அவர்கள் வெளியேபோய் உரம் வாங்கினால் கலப்பட உரம்தான் இருக்கும். ஆனால், கூட்டுறவுத் துறைமூலம் விற்கப்படும் உரங்கள் கலப்படமற்ற உரங்கள். நல்ல தரமான உரங்கள் இங்கே விற்கப்படுகின்றன. இயற்கை உரங்களும் விற்கப்படுகின்றன. எனவே, விவசாயிகள் எந்த உரங்களைக் கேட்கிறார்களோ, அந்த உரங்களை கூட்டுறவுத் துறை இன்றைக்கு விற்பனை செய்யத் தயாராக இருக்கிறது. 1 இலட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் இருக்கின்றன. எனவே, இதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**133—**

## உயர்மட்ட மேம்பாலம்

***3780—திரு. சு. ரவி:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*